# முரசொலி செல்வம் கலைஞரோடு கலந்தார்!



இடி இடித்து
மின்னலடித்து
மழையடித்தப் போதும்
முரசொலி
ஏந்தியவன் நீ !

அரசியலில்
நெருப்புச் சூறாவளி
வீசிய போதும்
கலைஞரோடு
நீந்தியவன்நீ !

மிசா
நெருக்கடியும்
முரசொலிக்கு
நெருக்கடியும் வந்த போதும்
கலைஞரின்
கடிதத்தை
உடன்பிறப்புகளிடம்
சேர்த்தவன்நீ !

ஜெயலலிதா அரசு
சட்டமன்ற
கூண்டில்
நிறுத்திய போது
முரசொலியின்
கம்பீரம் நீ !

அலையோடு
விளையாடுவதை விட
ஆழிப்பேரலையை
கடக்கக்
கலைஞரிடம்
கற்றுக்
கொண்டவன்நீ !

தொண்டர் முதல்
முதலமைச்சர் வரை
தலைவர் கலைஞரையும்..
தலைவர்
முத்துவேல்கருணாநிதிஸ்டாலின்
அவர்களையும்
கண்டவன்நீ !

ஊராட்சி முதல்
தில்லி வரை
அரசியலின்
நாடிப் பிடித்தவன்
நாடி பிடித்தவன்
நீ !

தலைவர் கலைஞருக்கு
முரசொலி மாறன்
மனசாட்சி
முரசொலி செல்வம்
உயிர் காட்சி என்று
சொல்லவா !

தலைவர்
முதலமைச்சருக்கு
அனைத்திலும்
வழிகாட்டி
அல்லவா !

எதிரிகளுக்கு
உன்
எழுத்தில்
வைக்கும்
பொடியும்
வெடியும் உச்சம் !

முரசொலி
அழுது
புலம்புகிறது
உன் பிரிவில்
அத்தனை
துக்கம் !

கலைஞர்
மடியில் வளர்ந்து
நெஞ்சில் வாழ்ந்து
நிலைக்கிறாய் !

தலைவர் கலைஞரோடு
புகழில்
நிறைகிறாய் !

**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
திமுக இலக்கிய அணி



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கோ.சு. மணி**
**அக்டோபர் 12 (1962)**



**சென்னை 57வது வட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்**

**மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.**

**விலைவாசி போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தபோது சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் 'கொள்கை குன்று' எனப் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### முரசொலி செல்வம்–

## உண்மையைப் பாதுகாப்பதில் துணிச்சல் மிக்கவர்!

### சென்னை பத்திரிகையாளர் சங்கம் இரங்கல்!

சென்னை, அக்.12-

சென்னை பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள இரங்கல் அறிக்கை வருமாறு:-

எழுத்தாளர் - மூத்த பத்திரிகையாளர் முரசொலி செல்வம் அவர்கள் 10.10.2024 அன்று காலமானார்.

முரசொலி பத்திரிகையின் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய முரசொலி செல்வம் அவர்கள், கருத்து சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் கூண்டிலேற்றி கண்டிக்கப்பட்ட பத்திரிகை ஆசிரியர்.

பத்திரிகைத் துறையில் அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பும், உண்மையைப் பாதுகாப்பதில் அவரது துணிச்சலும் என்றென்றும் நினைவு கூரப்படும்.

முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## முரசொலி செல்வம் மறைவு!

### தென்னிந்திய நடிகர் சங்கம் இரங்கல்!

சென்னை, அக்.12-

முரசொலி செல்வம் மறைவுக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் இரங்கல் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து நடிகர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தென்னிந்திய நடிகர் சங்கத்தில் இரங்கல் செய்தியில் "முரசொலி பத்திரிகையில், சுமார் 50 ஆண்டுகளாக நிர்வாக ஆசிரியராக பணியாற்றி தன் எழுத்துகளால் ஜனநாயகக் குரவாக ஒலித்தவர் முரசொலி செல்வம்.

அவர்கள் முரசொலி நாளிதழின் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளராகவும் இருந்துக்கொண்டே திரைத்துறையில் இது எங்க நாடு, திருட்டு ராஜாக்கள், மாடி வீட்டு ஏழை, பாலைவன ராஜாக்கள், புயல்பாடும் பாட்டு, பாடாத தேனீக்கள், பாசப் பறவைகள் உட்பட 50க்கும் மேற்பட்ட திரைப் படங்களை தயாரித்தவர்.

மேலும் திரைத்துறையி லும் பத்திரிக்கைத்துறையிலும் சிறப்பான பங்களித்தவர்.

84 வயதான முரசொலி செல்வம் அவர்கள், வயது மூப்பு காரணமாக உடல் நலக்குறைவால் காலமானார்.

அவருடைய மறைவால் இழந்து வாடும் குடும்பத்தாருக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்".

இவ்வாறு தென்னிந்திய நடிகர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## முரசொலி செல்வம் மறைவு!

### பா.ஜ.க. அண்ணாமலை இரங்கல்!

லண்டன், அக். 12-

பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு: -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் தங்கை கணவரும், முரசொலி நாளிதழின் ஆசிரியருமான முரசொலி செல்வம் உடல் நலக்குறைவால் காலமானார் என்ற செய்தியறிந்து மிகுந்த வருத்தமடைகிறேன் என பா.ஜ.க. தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

முரசொலி செல்வம் குடும்பத்தினருக்கும், முதலமைச்சருக்கும், பா.ஜ.க. சார்பாக ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## முரசொலி செல்வம் மறைவு!

### பிரேமலதா விஜயகாந்த் இரங்கல்!

சென்னை, அக். 12-

முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

விஜயகாந்த் உடன் நல்ல நட்புடன் பழகியவர் முரசொலி செல்வம். முரசொலி செல்வம் மறைவு தி.மு.க.வுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

இவ்வாறு பிரேமலதா விஜயகாந்த் இரங்கல் தெரிவித்துள்ளார்.

## புவியில் நாளை - புகழில் நிலையாய் முரசொலி செல்வம்!

உள்ளத்தில் என்றும் நல்லெண்ணம் வளர்த்து
எண்ணத்தில் உயர்வை தானாய் சேர்த்து
முரசொலி பேரினை தன்னோடு சுமந்து
முழு நிலவாய் மனதிலும் குளிர்ந்து
பணியாளர்களை அன்பு கொண்டு அரவணைத்து
பண்புள்ளமுடன் எளிமையில் என்றும் வாழ்ந்து
கலைஞர் அய்யாவின் மருமகனாய் சிறந்து என்றும்
கட்டிக் காக்கும் முரசொலிதான் என்றும்
பத்திரிக்கை உலகில் தனித் தன்மை கொண்டு விளங்கி
பலரிடம் நேசமுடன் என்றும் பழகி
வாழ்ந்து பெருமை சேர்த்தார் இம்மண்ணிலே
இப்புவியில் நாளையும் வாழ்வார் புகழின் நிலையிலே

**முருக. சண்முகம்,**
துணைப் பதிவாளர் (ஓய்வு) கூட்டுறவுத் துறை

# நட்பு நாயகன்!



நட்பு நாயகன்
நறுமலர்க்கோவையன்
முரசொலி செல்வம்
மறைந்தார் என்பதை
மனிதர் நம்பலாம்
அவர் மனத்தோடு பழகிய
மலர்கள் நம்பமாட்டா;

அவர் இல்லை என்று
குடும்பம் கருதலாம்
அவர் இதயத்தில்
குடியேறியிருந்த
அன்பு நம்பாது
அனைவர் மீதான
ஆசை நம்பாது;

அவர் வாழ்வு
முடிந்தது என்று பேச்சுகள்
எழலாம்
மென்மையை மேன்மையை
மீட்டிய பாச யாழ்
அப்படிச் சொல்லாது

கலைஞர்.மாறன்.செல்வம்
மூவரும்
முரசொலி ஏட்டின்
இதயத்துடிப்புகளில்
காலமெல்லாம் இருப்பர்
காலமாக மாட்டார்கள்.

கனிவும் பணிவும்
வற்றாது ஓடிக்கொண்டிருந்த
மானுடநதி செல்வம்

அவரோடு
வெகுளியும் வெறுப்பும்
ஒப்பந்தம் போட முடியாது.

இனிய மழைத்துளிகளை
ஏந்தி வந்தவர் செல்வம்
இடிகளின் மகனாக
எப்போதும்
நடந்துகொண்டதில்லை.

ஆழமான
கொள்கைப்பற்றுடையவர்
காற்றின் கலவர அலைகளால்
அவரை ஒருபோதும்
அசைக்கமுடியாது.

சிலந்தியாக
அவர்பின்னிய
வலைகளில் இருந்த
எழுத்தின் வலிமையை
முரசொலி படித்தவர் அறிவார்
மூவாத் தமிழும் அறியும்.

கவிப்பேரருவி
**ஈரோடு தமிழன்பன்**



### பல்வேறு

## அடக்குமுறைகளை எதிர்கொண்டவர் முரசொலி செல்வம்!

### பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் இரங்கல்!

சென்னை, அக்.12-

பல்வேறு அடக்குமுறைகளை எதிர்க்கொண்டவர் முரசொலி செல்வம் அவர்கள் என்று பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கலைஞரின் சகோதரி மகனான முரசொலி செல்வம், முரசொலி நாளிதழின் வளர்ச்சிக்காக 50 ஆண்டுகளுக்கும் மேலாக பங்காற்றினார். அரசியலில் கலைஞருக்கு துணையாக இருந்தவர். அதன் காரணமாகவே பல்வேறு அடக்குமுறைகளை எதிர்கொண்டவர். மிகவும் அமைதியான இயல்பு கொண்ட அவர், தி.மு.க. நிர்வாகிகள் அனைவரையும் அரவணைத்துச் சென்றவர் ஆவார்.

முரசொலி செல்வத்தின் மறைவு முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

இவ்வாறு டாக்டர் இராமதாஸ் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## முரசொலி செல்வம்; திராவிட இதழியலின் தீச்சுடர்!

### ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி இரங்கல்!

சென்னை, அக் 12-

ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிட இயக்க போர்வாளாம் முரசொலி நாளிதழின் நிர்வாக ஆசிரியராக நீண்ட காலம் பணிபுரிந்த திரு. முரசொலி . செல்வம் அவர்கள் இன்று உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து வருந்துகிறோம்.

ஐயா. கலைஞர் அவர்களோடும், திரு.முரசொலி மாறன் அவர்களோடும் இணைந்து அவர் ஆற்றிய திராவிட இதழியல் பணிகள் யாவும் சிறப்புக்குரியவை

முரசொலிக்காக அவர் ஆற்றிய துணிச்சலான பணிகளும், அதனால் அவர் சந்தித்த நெருக்கடிகளும் திராவிட இதழியல் வரலாற்றில் போற்றத்தக்கவையாகும்.

அவர் திராவிட இதழியலின் தீச்சுடராக திகழ்ந்தார்.

கலைஞரின் மருமகன், முரசொலி மாறன் அவர்களின் தம்பி, தமிழக முதல்வர் தளபதி அண்ணன் ஸ்டாலின் அவர்களின் உடன்பிறவா சகோதரர், சகோதரி செல்வி அவர்களின் கணவர் என பல முக வரிகள் இருந்தாலும், முரசொலி செல்வம் என்ற அழுத்தமான அடையாளம் அவருக்கு பெருமை சூட்டுவதாக இருந்தது.

அவரை இழந்து வாடும் முதல்வர், துணை முதல்வர், சகோதரி செல்வி, தயாநிதி மாறன் எம்.பி., சன் குழுமங்களின் தலைவர் கலாநிதி மாறன் உள்ளிட்ட அனைவருக்கும் மனிதநேய ஜனநாயக கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### முரசொலி செல்வம் மறைவு! கலைஞருக்கு

## அரசியலிலும் - இதழியலிலும் துணையாக இருந்தவர்!

### பா.ம.க. - டாக்டர் அன்புமணி இராமதாஸ் இரங்கல்!

சென்னை, அக்.12–

பா.ம.க. தலைவர் அன்புமணி இராமதாஸ் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு : –

முரசொலி முன்னாள் ஆசிரியரும், முத்தமிழறி ஞர் கலைஞரின் மருமகனுமான முரசொலி செல்வம் உடல்நலக் குறைவால் பெங்களூரில் (10.10.2024) அன்று காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

முரசொலி மாறன் அவர்களின் சகோதரரான முரசொலி செல்வம், கலைஞருக்கு அரசியலிலும், இதழியலிலும் துணையாக இருந்தவர். கலைஞர் அவர்களின் மறைவுக்குப் பிறகு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அவரது குடும்பத்தி னருக்கு ஆலோசனை வழங்கி வழி நடத்தியவர் முரசொலி செல்வம்.

அவரை இழந்து வாடும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட செல்வத்தின் குடும்பத்தி னருக்கும், திமுகவின ருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் அன்புமணி இராமதாஸ் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.